# TNPSC GROUP II/IIA TEST BATCH 2025
# TEST X – பொதுத்தமிழ்
# அலகு 7 - இலக்கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

1. பொருத்துக:
A. ஒழுக்கத்தின் எய்துவர் — 1. செல்வம் நிலைக்காது
B. இழுக்கத்தின் எய்துவர் — 2. மேன்மை
C. பெறாமை உடையவரிடம் — 3. உயர்வு இருக்காது
D. ஒழுக்கமில்லாதவரிடம் — 4. எய்தாப் பழி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

2. பல கற்றும் கல்லாதவராக கருதப்படுவர் யார்?
a. அதிக நூல்களை அறியாதவர்
b. அறிவில்லாதார்
c. அவைக்கு அஞ்சுபவர்
d. உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர்
e. விடை தெரியவில்லை

3. சரியான ஈற்றடியைத் தேர்க:
'ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்கு ___________.
a. பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து
b. பொன்றுந் துணையும் புகழ்
c. தகுதியான் வென்று விடல்
d. அறனல்ல செய்யாமை நன்று
e. விடை தெரியவில்லை

4. 'திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்கள் என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
a. அன்புடையோர்
b. அறிவு முதிர்ச்சியுடையோர்
c. ஆர்வமிகு நண்பர்கள்
d. உற்றார்
e. விடை தெரியவில்லை

5. 'புறத்துஉறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு _______________'.
'குறளினை நிறைவு செய்க.
a. அன்பு இலவர்க்கு
b. மரம் தளிர்த் தற்று
c. அ∴தே துணை
d. இயைந்த தொடர்பு
e. விடை தெரியவில்லை

6. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A. அன்பிலார் | | 1. ஆர்வமுடைமை |
| B. அன்புடையார் | | 2. உயிர்நிலை |
| C. அன்பு ஈனும் | | 3. என்பும் உரியர் பிறர்க்கு |
| D. அன்பின் வழியது | | 4. எல்லாம் தமக்குரியர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 2 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

7. சரியான தொடரை பூர்த்தி செய்க.
உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
a. புண் உடையார் கல்லாதவர்
b. கடையரே கல்லாதவர்
c. சாந்துணையும் கல்லாதவாறு
d. காமுறுவர் கற்றறிந்தார்
e. விடை தெரியவில்லை

8. "ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை" என்று யாரை வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
a. பொருளற்றவர்
b. அருளற்றவர்
c. ஊக்கமில்லாதவர்
d. கொடுங்கோன்மை உடையவர்
e. விடை தெரியவில்லை

9. "ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"
இத்திருக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் எது?
a. நட்பாராய்தல்
b. கூடா ஒழுக்கம்
c. புறங்கூறாமை
d. வினை செயல்வகை
e. விடை தெரியவில்லை

10. யாருடைய நட்பினை பொருள் கொடுத்தாவது பெற வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
a. அறிவில் சிறந்தவர் நட்பு
b. கற்றவரின் நட்பு
c. உயர்குடியில் பிறந்து பழிச்சொல்லுக்கு நாணுகின்றவரின் நட்பு
d. விழுமந் துடைத்தவர் நட்பு
e. விடை தெரியவில்லை

11. "மாயிரு ஞாலம் பகலும்பாற் பட்டன் றிருள்" யாருக்கு?
a. பிறரோடு பேசிப் பழகி சிரித்து மகிழ இயலாதவருக்கு
b. பொருளில்லாதவருக்கு
c. கண்ணோட்டம் அற்றவருக்கு
d. விருந்தினரைப் போற்றாதவருக்கு
e. விடை தெரியவில்லை

12. அந்தணர் போற்றும் மறைநூலுக்கும், அறத்திற்கும் அடிப்படையாய் அமைந்து உலகத்தைக் காப்பது ______.
a. மன்னரின் செங்கோன்மை
b. மன்னரின் ஈகை
c. மன்னரின் குடியை காக்கும் செயல்
d. கடுஞ்சொல் பொறுக்கும் மன்னரின் செயல்
e. விடை தெரியவில்லை

13. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்.

1. இத்திருக்குறள் இடம் பெற்றுள்ள அதிகாரம் கல்வி.
2. இத்திருக்குறள் கற்றவருக்கும், கல்லாதவருக்கும் இடையே உள்ள ஒற்றுமையை சுட்டிக் காட்டுகிறது.
3. இத்திருக்குறளில் இடம்பெற்றுள்ள அணிநேர் நிரல்நிறை அணி.

a. 1, 2, 3 சரி　b. 1, 2, 3 தவறு　c. 1, 2 சரி, 3 தவறு
d. 2, 3 சரி 1 தவறு　e. விடை தெரியவில்லை

14. மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று பொருள் உள்ள திருக்குறளுக்கு வள்ளுவர் ஒப்பிட்ட ஒப்புமை யாது?
a. குன்றின்மணி விதை, நெற்மணிகள்　b. கணை, யாழ்　c. பசு, புலி
d. மழித்தலும், நீட்டலும்　e. விடை தெரியவில்லை

15. ___________ பண்பு கொண்டவரின் வறுமையை கேடு என்று எண்ணாது உலகம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?
a. கண்ணோட்டம்　b. அருளுடைமை　c. ஊக்கமுடைமை
d. நடுவுநிலைமை　e. விடை தெரியவில்லை

16. நிலத்திற்குச் சுமை எனவும், உலகத்திற்கு உரிமை உடையவர் எனவும் வள்ளுவரால் குறிப்பிடப்படுபவர்கள் யார் யார்?
a. கல்லாதவர், இரக்கம் காட்டுபவர்
b. கண்ணோட்டம் இல்லாதவர், கற்றவர்
c. கண்ணோட்டம் இல்லாதவர், இரக்கம் காட்டுபவர்.
d. அவைக்கு அஞ்சுபவர், அன்புடையவர்
e. விடை தெரியவில்லை

17. பகைவர் போர்களத்தில் அஞ்சுகின்ற பேடியின் கையில் உள்ள கூர்மையான வாளுக்கு ஒப்பாக வள்ளுவர் கூறுவது எது?
a. அவை அஞ்சுபவர் கற்ற நூல்　b. கல்லாதவர் பெற்ற செல்வம்
c. ஒழுக்கமில்லாதவன் பெற்ற தலைமை　d. வீரமில்லாத அரசனின் செங்கோல்
e. விடை தெரியவில்லை

18. "இருள் தீர எண்ணிச் செயல்" என முடியும் திருக்குறளில் வள்ளுவர் கூறியவற்றை வரிசைப்படுத்துக.
1. வினை　2. இடம்　3. கருவி　4. பொருள்　5. காலம்
a. 5, 4, 3, 1, 2　b, 3, 5, 1, 4, 2　c. 4, 5, 3, 1, 2
d. 4, 3, 5, 1, 2　e. விடை தெரியவில்லை

19. "பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது" யாருக்கு?
a. ஈகை குணம் உள்ளவருக்கு　b. இரக்க குணம் உள்ளவருக்கு
c. பிற உயிரை கொல்லாதவருக்கு　d. விருந்தோம்பல் செய்பவருக்கு
e. விடை தெரியவில்லை

20. "இழுக்கா இயன்றது அறம்" என்று வள்ளுவர் கூறியுள்ள நான்கு பண்புகளை வரிசைப்படுத்துக.
1. அழுக்காறு　2. அவா　3. இன்னாச்சொல்
4. ஈகை　5. வெகுளி
a. 1, 5, 4, 3　b. 2, 1, 4, 3　c. 1, 2, 5, 3
d. 2, 4, 1, 3　e. விடை தெரியவில்லை

21. செல்வ நிலைமையில் உள்ள வறுமை என்று வள்ளுவர் குறிப்பிடுவது?
a. ஈகை செய்யாமை

b. விருந்தினரைப் போற்றாத அறியாமை செயல்
c. இரப்பவரிடத்தில் கடுஞ்சொல் பேசுவது
d. செல்வத்தைப் பிறரிடம் இருந்து கவர்ந்து மேலும் சேர்ப்பது.
e. விடை தெரியவில்லை

22. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலிதாக் குறின்.
அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ப்பதம்
a. அஞ்சாதிருத்தல் b. அஞ்சுதல் c. தாக்குதல்
d. சினம் கொள்ளாமை e. விடை தெரியவில்லை

23. சரியான திருக்குறளைத் தேர்ந்தெடு:
a. மறத்தல் இறப்பினை என்றும் அதனை பொறுத்தல் அதனினும் நன்று.
b. நல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான் செல்விருந்து வானத் தவர்க்கு.
c. உயற்பாலது ஒரும் அறனே ஒருவற்கு செயற்பாலது ஓரும் பழி.
d. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால் செல்லும்வாய் நோக்கிச் செயல்.
e. விடை தெரியவில்லை

24. "இவனையும் சுமப்பதே எனக்கு அறம்"
என்று கருதி நிலம் யாரை சுமக்கிறது. என வள்ளுவர் கூறுகின்றார்?
a. புறங்கூறுபவனை b. ஈகை செய்பவனை c. பிற உயிர்களை கொல்லாதவனை
d. பொறுமையுடையவனை e. விடை தெரியவில்லை

25. அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். - இத்திருக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் எது?
a. அவையஞ்சாமை b. கல்லாமை c. வினைசெயல்வகை
d. செங்கோன்மை e. விடை தெரியவில்லை

26. பொருத்துக:

| அகராதி | இயற்றியவர் |
|---|---|
| A. பழமொழி அகராதி | 1. பெப்ரீஷியஸ் |
| B. திராவிட சொற்பிறப்பியல் அகராதி | 2. இராமநாதன் |
| C. பட அகராதி | 3. பரோ, எமினோ |
| D. தமிழ் ஆங்கில அகராதி | 4. பெர்சிவல் |
| E. சதுரகராதி | 5. வீரமாமுனிவர் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 | 5 |
| b. | 3 | 4 | 2 | 1 | 5 |
| c. | 4 | 3 | 2 | 1 | 5 |
| d. | 2 | 1 | 3 | 4 | 5 |

e. விடை தெரியவில்லை

27. "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்' – என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர்.
a. பரிதிமாற்கலைஞர் b. நாமக்கல் கவிஞர் c. பாரதியார்
d. பாரதிதாசன் e. விடை தெரியவில்லை

28. "வீறுடைச் செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி' என்று தமிழின் பெருமைகளைப் பறைசாற்றியவர்.
a. பாவலரேறு பெருஞ்சித்திரனார் b. பரிதிமாற் கலைஞர் c. அயோத்திதாசப் பண்டிதர்
d. பாவாணர் e. விடை தெரியவில்லை

29. 'பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி' எனக் கூறியவர்
a. திரு.வி. கலியாணசுந்தரனார் b. தெ.பொ. மீனாட்சிசுந்தனார்
c. உ.வே. சாமிநாதர் d. தேவநேயப் பாவாணர்

e. விடை தெரியவில்லை

30. உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை அதன் தொன்மை கருதி 'என்றுமுள தென்தமிழ்' எனக் கூறியவர்.
a. திருநாவுக்கரசர் b. தொல்காப்பியர் c. கம்பர்
d. திருவள்ளுவர் e. விடை தெரியவில்லை

31. 'தமிழே மிகவும் பண்பட்ட மொழி' என்று பாராட்டியவர் யார்?
a. கமிலசுவலபில் b. மாக்சு முல்லர் c. முனைவர் எமினோ
d. வில்லியம் ஜோன்ஸ் e. விடை தெரியவில்லை

32. உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்ட ஆண்டு _____________.
a. 1966 b. 1980 c. 1981 d. 1978 e. விடை தெரியவில்லை

33. திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்
எனத் தமிழின் பழஞ் சிறப்பினைப் பெருமிதம் பொங்கப்பாடிய கவிஞர்
a. பாரதியார் b. கண்ணதாசன் c. சுரதா
d. பாரதிதாசன் e. விடை தெரியவில்லை

34. 'ப:.றுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' – எனக் கூறும் நூல்
a. புறநானூறு b. சிலப்பதிகாரம் c. தேவாரம்
d. பட்டினப்பாலை e. விடை தெரியவில்லை

35. பொருத்துக:

| சிறப்புத் தொடர் | நூல்கள் |
|---|---|
| A. தமிழ் வேலி | 1. தேவாரம் |
| B. தமிழ்கெழுகூடல் | 2. திருவாசகம் |
| C. கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் | 3. பரிபாடல் |
| D. பண்ணொடு தமிழொப்பாய் | 4. புறநானூறு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

36. தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் செய்யும் வகையில் எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைத் களைந்தவர்
a. வீரமாமுனிவர் b. கால்டுவெல் c. ஜி.யு. போப்
d. எர்னஸ்ட் காசிரர் e. விடை தெரியவில்லை

37. 'ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள் மின்னேர் தனியாழி வெங்கதிரோன்றேனையது'' என்ற பாடல் இடம் பெறும் நூல்
a. மாறனலங்காரம் b. காரிகை c. தண்டியலங்காரம்
d. நன்னூல் e. விடை தெரியவில்லை

38. 'தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும் - எனக் கூறியவர்.
a. டாக்டர் கிரௌல் b. கால்டுவெல் c. வீரமாமுனிவர்
d. ஜி.யு. போப் e. விடை தெரியவில்லை

39. சரியான விடையை எழுதுக.
நடுத்திராவிட மொழிகள் யாவை?
a. கதபா, பெங்கோ, கோயா
b. தோடா, கோத்தா, கொரகா
c. மால்தோ, குருக், பிராகுயி
d. கோத்தா, கூவி, மால்தோ

40. “திராவிடம்” என்னும் சொல்லை முதன் முதலில் குறிப்பிட்டவர்.
a. ஹீராஸ் பாதிரியார்
b. அகத்தியலிங்கம்
c. குமரிலபட்டர்
d. ஹோக்கன்
e. விடை தெரியவில்லை

41. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
a. திராவிட > திரவிட > திரமிள > தமிழ்
b. திராவிட > திரமிள > திரவிட > தமிழ்
c. தமிழ் > திரமிள > திரவிட > திராவிட
d. தமிழ் > திராவிட > திரமிள > திரவிட
e. விடை தெரியவில்லை

42. திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் யார்?
a. சி.வை. தாமோதரம்
b. வ.சுப. மாணிக்கம்
c. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
d. சீனி. வேங்கடசாமி
e. விடை தெரியவில்லை

43. தமிழ் அறிஞர் டாக்டர் உ.வே.சா. அவர்களின் பெயரின் விரிவாக்கம் என்ன?
a. உத்தமபுரம் வேங்கடனின் மகனார் சாமிநாதன்.
b. உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன்.
c. உத்தமபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்
d. உத்தமதானபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்
e. விடை தெரியவில்லை

44. உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள்
a. கால்டுவெல் - கெல்லட்
b. கமிலசுவலபில் - மாக்சுமுல்லர்
c. ஜி.யு. போப் - சூலியல் வின்சோன்
d. ஹிப்பாலஸ் - பிளினி
e. விடை தெரியவில்லை

45. பொருந்தாததை எழுதுக.
உ.வே.சா. பதிப்பித்த நூல்கள்
a. உலா
b. கோவை
c. பிள்ளைத்தமிழ்
d. பரணி
e. விடை தெரியவில்லை

46. ‘புலமைப் பெருங்கடல்’ என அழைக்கப் பெற்றவர்.
a. உ.வே. சாமிநாதர்
b. மு. வரதராசனார்
c. வ.சுப. மாணிக்கனார்
d. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
e. விடை தெரியவில்லை

47. முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தனர். – உ.வே.சா.
மேற்கண்ட வரியில் ‘வித்தியாப்பியாசம்’ என்பது
a. கல்வித் தொடக்கம்
b. எழுத்துப் பயிற்சி
c. கல்விப் பயிற்சி
d. மனப்பாடப் பயிற்சி
e. விடை தெரியவில்லை

48. கூற்று : தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் ‘கானல் வரி’ புதுவகையான ஆராய்ச்சி நூல்.
காரணம் : சிலப்பதிகார காப்பியத்தைக் கானல் வரி என்னும் பகுதியை மையமாக இயக்கிச் செல்வது என்னும் கொள்கையை இதன் மூலம் நிலைநாட்டினார்.
a. இரண்டும் சரி
b. இரண்டும் தவறு
c. கூற்று சரி, காரணம் தவறு
d. கூற்று தவறு, காரணம் சரி
e. விடை தெரியவில்லை

49. 'DRADIDIAN FEDERATION" என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர்.

a. சி. இலக்குவனார் b. ஜே.எம். நல்லசாமி c. மறைமலையடிகள்
d. திரு.வி.க e. விடை தெரியவில்லை

50. சரியானதைக் கண்டறிக.

I. தேவநேயப்பாவாணர் - அகர முதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றினார்.
II. தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.
III. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி இயக்குநராக இருந்தார்.
IV. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் தலைவராக இருந்தார்.

a. I மற்றும் II b. I, II, III மட்டும் c. III மற்றும் IV
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

51. 'தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்' என்று கூறியவர் யார்?

a. மறைமலையடிகள் b. தேவநேயப்பாவாணர் c. பரிதிமாற்கலைஞர்
d. பெருஞ்சித்திரனார் e. விடை தெரியவில்லை

52. அகராதி என்னும் சொல்லை முதன் முதலாக கையாண்டவர் யார்?

a. திருமூலர் b. வீரமாமுனிவர் c. திருநாவுக்கரசர்
d. கம்பர் e. விடை தெரியவில்லை

53. உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கப் பாடுபட்ட பெருஞ்சித்திரனாரின் இதழ் பெயரைத் தேர்ந்தெடு:

a. இந்தியா b. குயில் c. தமிழ்ச்சிட்டு
d. மணிக்கொடி e. விடை தெரியவில்லை

54. அற நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூலாகத் தொகுத்து விளக்கம் அளித்தவர்?

a. எச்.ஏ. கிருட்டிணனார் b. வீரமாமுனிவர் c. ஜி.யு. போப்
d. கால்டுவெல் e. விடை தெரியவில்லை

55. 'வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்'' எனப் புகழ்ந்தவர் யார்?

a. பரிதிமாற்கலைஞர் b. ரா.பி. சேது c. ந.மு. வேங்கடசாமி
d. வையாபுரி e. விடை தெரியவில்லை

56. 'பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது சரிப்படாது – எனப் பாடியவர்

a. பாரதியார் b. பசுவய்யா c. பாரதிதாசன்
d. நாமக்கல் கவிஞர் e. விடை தெரியவில்லை

57. தமிழ்மொழி தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆங்கிலக் கட்டுரை எழுதியவர்

a. பிரிதிமாற்கலைஞர் b. சி. இலக்குவனார் c. ஆறுமுக நாவலர்
d. வையாபுரி e. விடை தெரியவில்லை

58. ''மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்'' என்னும் தலைப்பில் உலகத்தமிழ் மாநாட்டில் சொற்பொழிவாற்றியவர்.

a. பாவலரேறு பெருஞ்சித்திரனார் b. பரிதிமாற் கலைஞர் c. தேவநேயப் பாவாணர்
d. சோமசுந்தர பாரதியார் e. விடை தெரியவில்லை

59. ஜி.யு. போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்ட ஆண்டு

a. 1786 b. 1806 c. 1856 d. 1886 e. விடை தெரியவில்லை

60. வீரமா முனிவர் இயற்றியுள்ள ஐந்திலக்கணங்களைக் கூறும் இலக்கண நூல்

a. முதுமொழி மாலை b. செந்தமிழ் இலக்கணம் c. கொடுந்தமிழ் இலக்கணம்
d. தொன்னூல் விளக்கம் e. விடை தெரியவில்லை

61. "ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை" என கூறும் நூல் எது?
a. பழமொழி நானூறு b. அறவுரைக் கோவை c. முதுமொழி மாலை
d. சிறுபஞ்ச மூலம் e. விடை தெரியவில்லை

62. "எறும்புந்தன் கையால் எண் சாண்" – என்று கூறிய புலவர் __________.
a. கபிலர் b. ஔவையார் c. காளமேகப் புலவர்
d. பாவலரேறு e. விடை தெரியவில்லை

63. i. "முறைசெய்யான் பெற்ற தலைமை"
ii. "நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவம்"
iii. "நிறை ஒழுக்கம் தேற்றாதான் பெற்ற வனப்பு"
இவை அனைத்தும் புதரில் தூவிய விதை போல என எடுத்துரைக்கும் நூல் எது?
a. ஆசாரக் கோவை b. திரிகடுகம் c. பழமொழி நானூறு
d. மூதுரை e. விடை தெரியவில்லை

64. "தமிழுண்டு தமிழ்மக்களுண்டு - இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்று பாடியவர் யார்?
a. தேசிய கவிஞர் b. புரட்சி கவிஞர் c. மக்கள் கவிஞர்
d. காந்திய கவிஞர் e. விடை தெரியவில்லை

65. இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல் பொருள் ஆய்வு போன்ற ஏடுகளில் தமிழ் மொழிப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியவர் ____________.
a. தேவநேயப் பாவணார் b. ஜி.யு. போப் c. திராவிட சாஸ்திரி
d. பாவலரேறு பெருஞ்சித்திரனார் e. விடை தெரியவில்லை

66. முடியரசன் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானது எது?
i. பறம்பு மலையில் நடந்த விழாவில் கவியரசு என்ற பட்டத்தை குன்றக்குடி அடிகளரால் முடியரசனுக்கு வழங்கப்பட்டது.
ii. இயற்பெயர் : துரை மாணிக்கம்
iii. காவியப்பாவை என்னும் காவியத்திற்கு 1966 ல் தமிழக அரசு பரிசு பெற்றார்.
iv. இவர் தமிழ்நாட்டின் வானம்பாடி என அழைக்கப்படுகிறார்.
a. i, iv சரி b. i மட்டும் சரி c. i, iii, iv சரி
d. i, ii, iii, ஐ சரி e. விடை தெரியவில்லை

67. தமிழர் திருமணம், தமிழர் மதம், மண்ணிலே விண், முதல் தாய்மொழி
மேற்காணும் நூல்களைப் படைத்தவர் யார்?
a. மொழி ஞாயிறு b. பாவலரேறு c. பாவேந்தர்
d. கவிஞர் தமிழொளி e. விடை தெரியவில்லை

68. இலக்கியச் செய்திகளோடு அறிவியல் துறைப்பொருள்களையும் முதன் முதலாகச் சேர்ந்து விளக்கம் தந்த நூல் எது?
a. அபிதான கோசம் b. அபிதான சிந்தாமணி c. விவேக சிந்தாமணி
d. சீவக சிந்தாமணி e. விடை தெரியவில்லை

69. 'கற்றவனுக்குக் கட்டுச் சோறு வேண்டாம்' என்று குறிப்பிடும் இலக்கியம்
a. மூதுரை b. நாலடியார் c. பழமொழி நானூறு
d. நான்மணிக்கடிகை e. விடை தெரியவில்லை

70. கீழ்வருவனவற்றுள் கவிஞர் கண்ணதாசன் இயற்றாத நூல் எது?

a. ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி b. இராஜ தண்டனை c. மாங்கனி
d. கொய்யாககனி e. விடை தெரியவில்லை

71. பின்வரும் நூல்களுள் மாறுபட்டதை தேர்க:
a. ஏலாதி b. பழமொழி c. சிறுபஞ்சமூலம்
d. திரிகடுகம் e. விடை தெரியவில்லை

72. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி
a. இராணி மங்கம்மாள் b. வேலு நாச்சியார் c. இராணி பத்மினி
d. இராணி லஷ்மிபாய் e. விடை தெரியவில்லை

73. பொருத்துக
A. உவமைக் கவிஞர் 1. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
B. காந்தியக் கவிஞர் 2. சுரதா
C. புரட்சிக் கவிஞர் 3. நாமக்கல் கவிஞர்
D. மக்கள் கவிஞர் 4. பாரதிதாசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

74. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ள வெளிநாடுகள்
a. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா
b. தென் அமெரிக்கா, கனடா, பிரான்சு
c. மொரிஷியஸ் தீவு, பினாங்குத் தீவு, பிஜித் தீவுகள்
d. அயர்லாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து
e. விடை தெரியவில்லை

75. கவிஞர் தாரா பாரதி எழுதாத கவிதை நூல் இது
a. புதிய விடியல்கள் b. இது எங்கள் கிழங்கு c. சொந்தச் சிறைகள்
d. இன்னொரு சிகரம் e. விடைதெரியவில்லை

76. 'He is a Prince among the Tamil Poets' (தமிழ்க் கவிஞர்களின் இளவரசன்) என்று வீரமாமுனிவர் பாராட்டிய புலவர்
a. இளங்கோவடிகள் b. கம்பர் c. பாரதியார்
d. திருத்தக்க தேவர் e. விடைதெரியவில்லை

77. பொருத்துக:
நூல் ஆசிரியர் பெயர்
A. திரிகடுகம் 1. விளம்பிநாகனார்
B. சிறுபஞ்சமூலம் 2. கணிமேதாவியார்
C. ஏலாதி 3. நல்லாதனார்
D. நான்மணிக்கடிகை 4. காரியாசான்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 1 | 3 | 2 |

e. விடைதெரியவில்லை

78. "மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்

தனக்குத் தகைசால் புதல்வர் …..”
-இப்பாடல் ஆசிரியரைக் கண்டறிந்து ஏழுதுக

a. விளம்பி நாகனார் b. சமண முனிவர் c. முன்றுறை அரையனார்
d. நல்லாதனார் e. விடைதெரியவில்லை

79. பொருந்தாத இணையைக் கண்டறிக

| ஆசிரியர் | | இயற்றிய நூல் |
|---|---|---|
| a. வீரமாமுனிவர் | - | பரமார்த்தகுரு கதை |
| b. தேவநேயப்பாவானர் | - | தமிழர் திருமணம் |
| c. திரு. வி.க | - | சைவத் திறவு |
| d. பெருஞ்சித்திரனார் | - | தமிழ்ச் சோலை |

e. விடைதெரியவில்லை

80. ‘ஏலாதி’ பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?
I. பாடல்தோறும் ஆறு கருத்துகளை விளக்கிக் கூறும் அற இலக்கியம்,‘ஏலாதி’
II. ‘ஏலாதி’ நூல் தற்சிறப்புப்பாயிரம், சிறப்புப்பாயிரம் உட்பட நூறு செய்யுட்களைக் கொண்டது
III. ஏலக்காய், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறு பொருள்கள் சேர்ந்த மருந்து உடல்பிணி போக்கி நலம் செய்யும்
IV. அதுபோல் ஏலாதியில் ஒவ்வொரு செய்யுளிலும் சொல்லப்பட்ட எட்டு கருத்துகளும் மக்களது மனநோயாகிய அறியாமையைப் போக்கித் தெளிவு தருவன.

a. II மற்றும் III b. III மற்றும் IV c. I மற்றும் III
d. I மற்றும் IV e. விடைதெரியவில்லை

81. ‘திரிகடுகம்’ பற்றிய கூற்றுக்களில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.
a. திரிகடுகம் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது.
b. திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்.
c. திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
d. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்.
e. விடைதெரியவில்லை

82. கீழே காணப்பெறுவனவற்றுள் சரியான கூற்றுகள் எவை?
I. நிலையாமையைச் சொல்லும் காஞ்சித் திணையின் துறைகளில் ஒன்று,‘முதுமொழிக் காஞ்சி’ இப்பெயரில் மதுரைக் கூடலூர் கிழார் இயற்றிய நூல்,‘அறவுரைக் கோவை’ என்றும் அழைக்கப்படுகிறது.
II. முதுமொழிக் காஞ்சியில், பதினொரு அதிகாரங்கள் உள்ளன.
III. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துச் செய்யுட்கள் உள்ளன.
IV. முதுமொழிக்காஞ்சியில் மொத்தம் நூற்றுப்பத்துச் செய்யுட்கள் உள்ளன. அவை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்களால் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன.

a. I மற்றும் III சரியானவை b. I மற்றும் IV சரியானவை
c. II மற்றும் III சரியானவை d. III மற்றும் IV சரியானவை
e. விடைதெரியவில்லை

83. “பலே, பாண்டியா? பிள்ளை! நீர் ஒரு புலவன், ஐயமில்லை” என்று பாரதியாரால் பாராட்டப் பெற்றவர் யார்?

a. நாமக்கல் கவிஞர் b. பாரதிதாசன் c. கவிமணி
d. ச.து.சு. யோகியார் e. விடைதெரியவில்லை

84. “பெண்மைக்குப் பன்முகங்கள் உண்டு” எனக்கூறியவர்

a. பாரதியார் b. பாரதிதாசன் c. வெ. இராமலிங்கனார்
d. சுரதா e. விடைதெரியவில்லை

85. கீழ்காணும் கூற்றுக்களில் பொருத்தமில்லாததைக் கூறுக.

I. பெருமுத்தரையர் பற்றிய குறிப்பு நாலடியாரில் உள்ளது. பழமொழியிலும் இடம் பெற்றுள்ளது.

II. கபிலர் பாடிய அறநூல் 'இன்னா நாற்பது'

III. நான்மணிக்கடிகையில் உள்ள நூறு பாடல்களும் நான்கு நான்கு கருத்துக்களைக் கொண்டு இயங்குவது

IV. அம்மை என்னும் வனப்பின்பாற்படும் காரியாசான் இயற்றிய நூல் சிறுபஞ்சமூலம் என்பதாகும்.

a. II மட்டும் பொருத்தமற்றது b. III மட்டும் பொருத்தமற்றது c. IV மட்டும் பொருத்தமற்றது
d. 1 மட்டும் பொருத்தமற்றது e. விடைதெரியவில்லை

86. 'வந்தது யாருக்கும் தெரியாது – நீ
வாழ்ந்ததை உலகம் அறியாது'
இவ்வடிகள் இடம் பெறும் பாடலைப் பாடியவர்

a. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் b. ஈரோடு தமிழன்பன்
c. தாரா பாரதி d. தமிழொளி
e. விடைதெரியவில்லை

87. மீதூண் விரும்பேல் என்று கூறியவர்

a. திருமூலர் b. திருவள்ளுவர் c. பாரதியார்
d. ஔவையார் e. விடைதெரியவில்லை

88. 'கவிஞர் முடியரசன்' எழுதாத நூல்

a. காவியப்பாவை b. தேன்மழை c. வீரகாவியம்
d. பூங்கொடி e. விடைதெரியவில்லை

89. "நீ மீண்டும் தோன்றிய பாரதியடா" என்று கல்யாண சுந்தரத்தை பாராட்டியவர்

a. மருதகாசி b. சுரதா c. உடுமலை நாராயண கவி
d. தோழர் ஜீவானந்தம் e. விடைதெரியவில்லை

90. தவறானத் தொடரைக் கண்டறிக:

a. தமிழகப் பொருள்கள் சீனாவில் விற்கப்பட்டன
b. சீனத்துப் பட்டும் சர்க்கரையும் தமிழகத்துக்கு இறக்குமதி ஆயின
c. பழந்தமிழகத்தின் வாணிகப் பொருட்கள் பற்றிய குறிப்புகள் உள்ள நூல் புறநானூறு
d. கரும்பு சீனாவிலிருந்து கொண்டு வந்து பயிரிடப்பட்டது.

91. கல்வி அழகே அழகு, என்றும் கல்வி கரையில கற்பவர் நாள் சில என்றும் கூறும் நூல்

a. திருக்குறள் b. நான்மணிக்கடிகை c. நாலடியார்
d. திரிகடுகம் e. விடைதெரியவில்லை

92. 'அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்'? - இது பயின்று வந்த நூல் எது?

a. பழமொழி b. நாலடியார் c. திருக்குறள்
d. ஆசாரக்கோவை e. விடைதெரியவில்லை

93. நாமக்கல் கவிஞரின் படைப்புகளின் எண்ணிக்கையை பொருத்துக:

A. இசை நாவல்கள் 1. நான்கு
B. புதினங்கள் 2. பத்து
C. கவிதைத் தொகுப்புகள் 3. மூன்று
D. மொழி பெயர்ப்புகள் 4. ஐந்து

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 1 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 3 | 1 | 4 | 2 |

e. விடைதெரியவில்லை

94. கீழ்க்கண்ட குறிப்பினை வைத்து நூல் பெயரைத் தெரிவு செய்.
1. 188 அடிகளைக் கொண்ட நூல்
2. பாண்டியன் நெடுஞ்செழியனை தலைவனாகக் கொண்ட நூல்
3. நூல் முழுவதும் ஆசிரியப்பாவால் ஆனது
4. அகமா, புறமா என்று கேள்விக்குரிய நூல்

a. நெடுநல்வாடை b. முல்லைப்பாட்டு c. மதுரைக் காஞ்சி
d. பட்டினப்பாலை e. விடைதெரியவில்லை

95. "மிடிமையும் அச்சமும் வீழுமோர் நாளதே
விடுதலை விளக்கு மோர் நாள்" – யார் கூற்று?
a. வாணிதாசன் b. முடியரசன் c. கண்ணதாசன்
d. பாரதிதாசன் e. விடைதெரியவில்லை

96. நாமக்கல் கவிஞர் பற்றிய செய்திகளைப் பொருத்துக:
A. கவிதை 1. சங்கொலி
B. காவியம் 2. அவனும் அவளும்
C. கட்டுரை 3. இலக்கிய இன்பம்
D. மர்ம நாவல் 4. மலைக் கள்ளன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடைதெரியவில்லை

97. கீழ்க்கண்டவற்றுள் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் படைப்புகளுள் ஒன்று எது?
a. வள்ளுவன் வகுத்த அரசியல் b. தேனிப்பு c. பழந்தமிழ்
d. வள்ளுவன் கண்ட இல்லறம் e. விடைதெரியவில்லை

98. பண்ணைப்புரம் தொடங்கி பக்கிங்ஹாம் வரை உரைநடை நூல் ஆசிரியர்?
a. கி.வ. ஜகந்நாதர் b. தாராபாரதி c. கண்ணதாசன்
d. தெ.பொ.மீ e. விடைதெரியவில்லை

99. மூதுரை குறித்த கூற்றுகளில் தவறான கூற்றினை கண்டறிக?
a. மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள்.
b. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.
c. கற்றவரை விட மன்னரே சிறந்தவர் ஆவார்
d. மன்னனை விட கற்றவரே சிறந்தவர் ஆவார்
e. விடைதெரியவில்லை

100. கீழ்க்கண்ட இணைகளில் எது தவறானது?
i. பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங் கண்ணனார்
ii. பதிற்றுப்பத்து - எட்டு சேர மன்னர்கள் குறித்து பேசுகிறது
iii. மதுரைக் காஞ்சி - முதுகுடுமி பெருவழுதி பற்றி குறிப்பிடுகிறது
iv. திருவஞ்சைக்களம் - கரிகால சோழனை பற்றி கூறுகிறது

a. i மற்றும் ii　b. ii மற்றும் iii　c. iii மட்டும்
d. iv மட்டும்　e. விடை தெரியவில்லை

101. கண்ணியமிகு காயிதே மில்லத் பற்றிய வாக்கியங்களில் சரியாக பொருந்தாததை கண்டறிக?
a. காயிதே மில்லத் என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள்.
b. இப்படிபட்ட தலைவர் கிடைப்பது அரிது அவர் நல்ல உத்தமமான மனிதர் என்று தந்தை பெரியார் புகழாரம் சூட்டினார்.
c. திருச்சியில் - ∴பருக் கல்லூரி, கேரளாவில் ஜமால் முகம்மது கல்லூரி ஆகியவற்றை தொடங்க அவரே காரணமாக இருந்தார்.
d. இந்திய நாட்டின் கனிம வளங்களைப் பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்
e. விடை தெரியவில்லை

102. குன்றகுடி அடிகளார் பற்றிய வாக்கியங்களில் சரியானவை எது?
i. குன்றகுடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும், எழுத்தாலும் இறைத்தொண்டும், சமூக தொண்டும் ஆற்றியவர்.
ii. திருக்குறள் நெறியை பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்.
iii. நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள், சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
iv. குறளோசை, அறிவு அறிவியல் உள்ளிட்ட இதழ்களை நடத்தியுள்ளார்.
a. i, iv　b. i, ii, iv　c. i, ii, iii
d. மேற்கண்ட அனைத்தும்　e. விடை தெரியவில்லை

103. டி,கே.சி. பற்றிய வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாதைக் கண்டறிக?
a. தமிழ் எழுத்தாளராக புகழ் பெற்றவர்
b. இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்
c. இவர் தமது வீட்டில் வட்டத்தொட்டி என்னும் பெயரில் நகைச்சுவைக் கூட்டங்களை நடத்தி வந்தவர்
d. கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் என பலவாறாக அழைக்கப்படுகின்றார்.
e. விடை தெரியவில்லை

104. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றிய வாக்கியங்களில் தவறானவற்றை கண்டுபிடி?
a. எளிய தமிழில் திரையிசைப் பாடல்களின் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்.
b. இவர் மக்கள் கவிஞர் என்னும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுகிறார்.
c. பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும் என கூறினார்.
d. இவர் திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வை போற்றியவர்.
e. விடை தெரியவில்லை

105. கண்ணதாசன் புனைப்பெயர்களில் தவறானதைத் தேர்க
a. வணங்காமுடி　b. பாவலர் மன்னன்　c. துப்பாக்கி
d. பார்வதிநாதன்　e. விடை தெரியவில்லை

106. ”ஆயுள் நாள் முழுவதும் தமிழ் மகன் வைத்துக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வாடாத கற்பகப் பூச்செண்டு – என்று கவிமணியின் பாடலைப் பாராட்டியவர் யார்?
a. வ.உ. சிதம்பரம்　b. டி.கே.சிதம்பரம்　c. சிதம்பர சுவாமி
d. சிதம்பர நாதன்　e. விடைதெரியவில்லை

107. தவறான கூற்றினைக் காண்க.
a. இது எங்கள் கிழக்கு, புதிய விடியல்கள், இமயம் எங்கள் காலடியில் முதலியன – தாராபாரதி இயற்றியது.
b. கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து முதலான நூல்களை துரை மாணிக்கம் இயற்றினார்.

c. ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ போன்ற புது வடிவில் கவிதை தந்தவர் - ஈரோடு தமிழன்பன்.
d. மே தினமே வருக, வீராயி, தமிழர் சமுதாயம் முதலிய படைப்புகள் தமிழ் ஒளி இயற்றியது.
e. விடைதெரியவில்லை

108. உ.வே. சாமிநாதரைப் பற்றி என் ஆசிரியர்ப் பிரான் என்று நூலை எழுதியவர்.
a. கி.வா. ஜெகநாதன் b. தமிழொளி c. ஈரோடு தமிழன்பன்
d. தாராபாரதி e. விடைதெரியவில்லை

109. எழு பெருவள்ளல்கள் என்னும் நூலை எழுதியவர் யார்?
a. கி.பி. சாலமன் b. அரு. ராமநாதன் c. கி.வா. ஜகந்நாதன்
d. அப்துல் ரகுமான் e. விடைதெரியவில்லை

110. கரிகால் சோழனைப் பற்றி பட்டினப்பாலை என்னும் நூலில் குறிப்பிட்டவர் யார்?
a. கடியலூர் உருத்திரங்கண்ணனார் b. தொண்டை மான் இளந்திரையன்
c. மருதன் இளநாகனார் d. உக்கிரப் பெருவழுதி
e. விடைதெரியவில்லை

111. பொருத்துக:

| | |
|---|---|
| A. மதியாதார் முற்றம் | 1. கூடுவது கோடிபெறும் |
| B. உபசரிக்காதார் மனையில் | 2. மிதியாமை கோடிபெறும் |
| C. குடிபிறந்தார் தம்மோடு | 3. சொன்ன சொல் தவறாமை கோடிபெறும் |
| D. கோடானு கோடி கொடுப்பினும் | 4. உண்ணாமை கோடி பெறும் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடைதெரியவில்லை

112. வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு என்னும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
a. ஏலாதி b. சிறுபஞ்சமூலம் c. எட்டுத்தொகை
d. திருமந்திரம் e. விடைதெரியவில்லை

113. “பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழி தான் என்று உறுதியாக சொல்வேன்” என்று கூறியவர்?
a. அண்ணா b. பெரியார் c. காயிதே மில்லத்
d. காமராசர் e. விடைதெரியவில்லை

114. கவிஞர் தமிழ்ஒளி அவர்கள் பிறந்த ஆண்டு
a. 1921 b. 1924 c. 1934 d. 1936 e. விடைதெரியவில்லை

115. பத்துப்பாட்டில் இரு நூல்களை இயற்றிய புலவர்கள் யார் யார்?
a. உருத்திரங் கண்ணனார், முடத்தாமக் கண்ணியார் b. நக்கீரர், நல்லூர் நத்தத்தனார்
c. நக்கீரர், உருத்திரங் கண்ணனார் d. எவருமிலர்
e. விடைதெரியவில்லை

116. வேலுநாச்சியார் பற்றிய கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு:
i. காலம் - 1730 முதல் 1796 வரை
ii. பெற்றோர் - செல்ல முத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள்
iii. இவரின் ஆலோசகர் - சின்னமருது

iv. இவருக்கு 8 ஆண்டுகால அடைக்கலம் தந்தவர் கோயமுத்தூர் கோபால நாயக்கர்
a. i, ii, iii, iv சரி b. i, ii, iv சரி c. i, ii, iii சரி
d. i, ii சரி e. விடைதெரியவில்லை

117. "சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளி பெறாத சமுதாயமும் வளர்ச்சி பெறாது" என்ற கூற்று யாருடையது?
a. பாரதிதாசன் b. ந. பிச்சமூர்த்தி c. பெரியார்
d. கவிஞர் தமிழொளி e. விடைதெரியவில்லை

118. தமிழ் அகராதியின் தந்தை ____________.
a. வீரமாமுனிவர் b. பெர்சிவல் பாதிரியார் c. லெவி பாஸ்டில்
d. இராமநாதன் e. விடைதெரியவில்லை

119. கீழ்க்காணும் மேற்கோள்களைக் கூறியவர்?
i. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'
ii. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'
iii. 'தெய்வம் பலப்பல சொல்லி பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்'
iv. எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவை எண்ணல் வேண்டும்'
a. பாரதிதாசன் b. பாரதியார் c. வாணிதாசன்
d. முடியரசன் e. விடைதெரியவில்லை

120. பொருத்துக:
A. "கூட்டுறவில் சேருங்கள் கூடிவாழப் பழகுங்கள்" 1. கவிமணி
B. உள்ளத்திலும் கவிதை இன்ப உருவெடுப்பதும் கவிதை 2. வெ. இராமலிங்கனார்
C. உயிரை, உணர்வை வளர்ப்பது தமிழே 3. புரட்சிக்கவிஞர்
D. யார் கவிஞன்? 4. முடியரசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 3 | 2 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடைதெரியவில்லை

121. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.
1. நாலடியாரை முப்பாலாகப் பகுத்தவர் - தருமர்
2. நாலடியாருக்கு அதிகாரம் வகுத்தவர் - பதுமனார்
a. இரண்டும் சரி b. கூற்று 1 மட்டும் சரி c. கூற்று 2 மட்டும் சரி
d. கூற்று 1, 2 தவறு e. விடைதெரியவில்லை

122. தொல்காப்பியன் என்ற புனைப்பெயரைக் கொண்டவர்.
a. சி. இலக்குவனார் b. தனிநாயகம் அடிகள் c. தெ.பொ.மீ
d. மயிலை. சீனி வேங்கடசாமி e. விடைதெரியவில்லை

123. "மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" - இக்குறிப்பு எதில் காணப்படுகிறது?
a. மாமண்டூர் கல்வெட்டு b. சின்னமனூர்ச் செப்பேடு c. அன்பில் செப்பேடு
d. வேள்விக்குடி செப்பேடு e. விடைதெரியவில்லை

124. ஆங்கிலமோ, பிறமொழியோ பயின்று விட்டால் அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற தீங்குடை மனப்போக்கர் வாழும்நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி? - இவ்வரிகள் யாருடையது?

a. முடியரசன் b. பாரதிதாசன் c. சுரதா d. பாவாணர் e. விடைதெரியவில்லை

125. “அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்” – என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல்?
a. குறுந்தொகை b. ஐங்குறுநூறு c. புறநானூறு
d. நற்றிணை e. விடைதெரியவில்லை



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது,
மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ
அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்